மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 03 புதன்கிழமை 20.09.2023 அதிர்வு 51

## 6 பொருள்களின் விலை குறைப்பு

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் சிலவற்றின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

அதன்படி, வாடிக்கையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள சதொச 04

# திலீபன் நினைவேந்தலுக்கு தடை கோரும் மனு தள்ளுபடி



## யாழ்ப்பாணம் நீதிமன்றம் அதிரடி



- எஸ்.நிதர்ஷன் -

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ். நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தடை கோரி பொலிஸார் தாக்கல் செய்த இந்த வழக்கில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி க.சுகாஷ், இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், 04

## திலீபனின் ஊர்திப் பவனியால் தமிழ் - சிங்கள இன முரண்பாடு

### அரசின் நிலைப்பாடு என்ன?

### சபையில் தயாசிறி கேள்வி



"திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி மூலம் தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடு தோற்றம் பெறும் நிலை காணப்படுகின்றது. ஆகவே, இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?"

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"திலீபனின் நினைவேந்தல் தற்போது அனுஷ்டிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராகத் திலீபன் இருந்தாலும் அவர் அஹிம்சை வழியில் போராடி இறுதியில் உயிர்த் தியாகம் செய்தார்.

திலீபனின் நினைவேந்தல் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது. 04

## திருமலை விபத்தில் வயோதிபர் மரணம்




திருகோணமலையில் உள்ள மலர்ச்சாலையொன்றின் வாகனம் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் ஆனந்தபுரி பகுதியில் இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது அவ்வீதியால் வேகமாகப் பயணித்த மலர்ச்சாலை வாகனம் மோதியுள்ளது. 04



## துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 'மாளிகாவத்தை பிரதீப்' உயிரிழப்பு!

கொழும்பு, மாளிகாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை சிகிச்சை பெற்று வந்த நபர் 20 நாள்களின் பின் இன்று உயிரிழந்துள்ளார். 04

## மன்னாரில் 3 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள் சிக்கியது





- மன்னார் நிருபர் -

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு இராஜப்பு ஜோசப் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள பகுதியில் ஹொக்கைன் வகை போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவர் செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 04

# இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு அமெரிக்க முகவர் நிறுவனம் உதவும்

## அமெ. சர்வதேச முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவர் உறுதி



இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே வேளை, தேவையான நிபுணத்துவ உதவிகளையும் வழங்கும் என்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78 பொதுச்சபை கூட்டத் தொடருக்கு இணையாக ரணில் விக்ரமசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபையின் இணை அலுவலகத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவருடன் சந்திப்பை மேற்கொண்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளதாவது–

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்குப் பயிற்சி பெற்ற பணியாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் சவாலுக்கு முகம்கொடுத்துள்ளோம். அதனால் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளமையின் பலன்களை அடைந்துகொள்ள இன்னும் இரண்டு வருடங்கள் அவசியம்.

இதன்போது இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்த போது ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய சுருக்கமான விளக்கமளித்த தோடு, அதனை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அரசின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைத்தார். ஊழலுக்கு எதிரான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அரசின் முழு அரச பொறிமுறையும் உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்வதற்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அத்துடன், அஸ்வெசும வேலைத்திட்டத்தின் அறிமுகத்தின் ஊடாக நலன்புரித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் செயற்றினை மேம்படுத்துவதில் இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின் போது ரணில் விளக்கமளித்துள்ளார்.

# வருட இறுதிக்குள் பங்களாதேஷ் செல்லவுள்ளார் ஜனாதிபதி ரணில்

## அந்த நாட்டு பிரதமருடனான சந்திப்பில் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருட இறுதிக்குள் பங்களாதேஷ்க்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். முன்னதாக பங்களாதேஷ்க்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த சந்தர்ப்பத்தை இழந்ததை நினைவு கூர்ந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று (19) நியூயோர்க்கில் இடம்பெற்றது.

இதன்போது ரணில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்தின் நாடுகளாக, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.

கடந்த காலத்தில் பங்களதேஷிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்ட கடனைக் குறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என்று எதிர்பார்க்கவில்லை என்று இதன்போது பங்களாதேஷ் பிரதமர் தெரிவித்தார். அந்த கடனை செலுத்த முடிந்துள்ளதன் ஊடாக இலங்கை பொருளாதார ரீதியில் அடைந்துள்ள முன்னேற்றம் தெரிகிறது. அதனை தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொள்வதன் ஊடாக இலங்கை சுமூகமான நிலைமையை அடைந்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கடந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு பங்களாதேஷ் வழங்கிய அசைக்க முடியாத ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் பங்களாதேஷ் மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதன்போது, பங்களாதேஷிடம் இருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக கிடைத்து வரும் ஆதரவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, பங்களாதேஷின் பெருந்தன்மைக்கு தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

# சிறுமிகளின் நிர்வாணப் படங்களை விற்பனை செய்துவந்த பிக்கு கைது!

சமூக ஊடகங்களில் 18 வயதுக் குட்பட்ட சிறுமிகளின் நிர்வாணப் புகைப் படங்கள் மற்றும் காணொளிகளை விற்பனை செய்துவந்தார் என்ற குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவரை சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் பயன்படுத்திய கணினியில் 7 மாதங்கள் முதல் 18 வயது வரை உள்ள உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சிறுமிகளின் சுமார் 1500 நிர்வாணப் படங்கள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் சிறுமிகளின் நிர்வாணப் படங்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த மோசமான செயல் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

ராகமை பகுதியைச் சேர்ந்த ஒருவர் சிறுமிகளின் நிர்வாணக் காட்சிகள் அடங்கிய படங்களின் தொகுப்பை மொத்த விற்பனைக்கு வழங்கி வருகிறார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் அவர் கிரிப்டோகரன்சி மூலம் பணம் பெறுவதையும் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இதன்படி, சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் நேற்று ராகம பகுதிக்குச் சென்ற போது, அப்பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் இருந்து இந்த மோசடி இடம் பெற்று வருகின்றமை தெரியவந்துள்ளது.

அந்த விகாரையைச் சோதனை செய்ததில், அங்கிருந்த 19 வயதுடைய பிக்கு ஒருவரே குறித்த நிர்வாணப் புகைப்படம் மற்றும் காணொளிளை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களில் 80 சதவீதம் பேர் 10 வயதுக்குட்பட்ட சிறுமிகள் என்பது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

# வலுவிழந்தோர் வாக்களிக்க வசதியாக அடையாள அட்டை

## பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் தகவல்

இலங்கையில் அங்கவீனமானவர்கள் வசதியாக வாக்களிக்கும் வகையில் புதிய அடையாள அட்டை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

10 மாவட்டங்களில் இந்த முன்னோடி வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கவீன சமூகத்தினருக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது அரசின் பொறுப்பு என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

இதேவேளை, இந்த அடையாள அட்டை வழங்கும் வேலைத் திட்டம் முழு இலங்கையிலும் மேற்கொள்ளப்பட வுள்ளது. இதற்கு முதல் கட்டமாக இயலுமை தொடர்பில் கண்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் நீர் வழங்கலில் தடை!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனால் இன்று (20) காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை 9 நேரம் நீர் விநியோகம் தடைப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

முருங்கன் மற்றும் அண்டிய பகுதிகள், மன்னார் நகர் மற்றும் அண்டிய பகுதிகள், பள்ளிமுனை மற்றும் அண்டிய பகுதிகள், எழுத்தூர் மற்றும் அண்டிய பகுதிகள், தோட்டவெளி,சிறுத்தோப்பு, எருக்கலம்பிட்டி, வங்காலை மற்றும் அண்டிய பகுதிகள், அடம்பன் மற்றும் அண்டிய பகுதிகள், திருக்கேதீஸ்வரம் மற்றும் நாகதழ்வு ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிக்கிறது.

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

# நுவரெலியாவில் பனி மூட்டம்: வாகன சாரதிகளுக்கு எச்சரிப்பு!

நுவரெலியா மாவட்டத்தில் அடை மழையுடன் கடும் பனி மூட்டம் காணப்படுவதால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் என்று போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையைத் தொடர்ந்து மத்திய மலை நாட்டில் பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழையுடனான வானிலை நிலவி வருகின்றது.

இந்த நிலையில் இன்று ஒரு சில பிரதேசங்களுக்கு காலை வேளை சீரான வானிலை காணப்பட்டது. பகல் வேளையில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

மழையுடன் ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் பிட்டவல, கினிகத்தேனை. தியகல, வட்டவளை, ரொசல்ல, ஹட்டன் உள்ளிட்ட பிரதேசங்களிலும் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டகலை, சென் கிளையார், தலவாக்கலை, லிந்துலை, சமர்செட், நானுஓயா ரதல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் கடும் பனிமூட்டம் காணப்படுவதால் இந்த வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக செலுத்துமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பனிமூட்டம் காணப்படும் பிரதேசங்களில் பயணிக்கும் போது தமக்குரிய பக்கத்தில் வாகனத்தின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு பயணிப்பதன் மூலம் வாகன விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளலாம் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பனிமூட்டம் காரணமாக ஹட்டன் கொழும்பு மற்றும் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதிகள் உள்ளிட்ட பல வீதிகளில் வாகன போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## திலீபன் நினைவேந்தலுக்கு...

"தமிழீழ விடுதலைப் புலிகளை நாங்கள் மீளுருவாக்கம் செய்யப் போவதாகக் குறிப்பிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸாருடைய வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தியாக தீபத்தினுடைய ஊர்திப் பவனிக்குத் தடை விதிக்க நீதிமன்றம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மறுத்திருக்கின்றது. ஏனெனில் எந்தவிதமான அடிப்படைகளும் இல்லாமல் பொலிஸார் தமிழீழ விடுதலைப் புலிகளை நாங்கள் மீளுருவாக்கம் செய்யப் போவதாக வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்கள்.

இந்த வழக்கில் நாங்கள் ஒரு விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தோம். பொலிஸார் குறிப்பிடுவது போல் சிவப்பு, மஞ்சள் வர்ணங்களைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் தியாக தீபத்தின் ஊர்திப் பவனியைக் கொண்டு வருகின்றோம் என்பதற்காக நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யப் போகின்றோம் என்று அர்த்தப்படுத்த முடியாது.

சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் இலங்கையிலே தடை செய்யப்பட்டிருக்கவில்லை. இலங்கையினுடைய தேசியக் கொடியில் கூட சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் உள்ளன.

அப்படியெனில் இலங்கையினுடைய தேசியக் கொடியையும் அல்லவா நாங்கள் தடை செய்ய வேண்டும். ஆகவே, சிவப்பு, மஞ்சள் வர்ணங்களை நாங்கள் பயன்படுத்துகின்றோம் என்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளை நாங்கள் நினைவு கூருகின்றோம், அவர்களை மீளுருவாக்கம் செய்யப் போகின்றோம் என்று அர்த்தம் கொள்ள முடியாது என நீதிமன்றத்திலே எடுத்து வாதிட்டிருந்தோம்.

உண்மையைச் சொல்லப் போனால் பொலிஸார் வெறும் கற்பனையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தியாக தீபத்தின் வழியில் இந்த ஊர்தி தொடர்ந்தும் பவனி வரும். இந்த வரலாற்று நிகழ்வை எதிர்கால சந்ததிக்குக் கடத்த மக்கள் எழுச்சியாக வருகை தர வேண்டும்." – என்றார்.

---

## திலீபனின் ஊர்தி...

திலீபனின் உருவப் படத்தைச் சுமந்த வண்ணம் ஊர்திப் பவனி மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் செல்லும்போது இடைவழியில் தாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பினரால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான சிங்களவர்கள் வசிக்கும் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் அதிகளவில் வாழும் பகுதிக்குச் செல்லாமல் இந்த ஊர்திப் பேரணி திருகோணமலைக்குச் சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செல்லாமல் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் சிங்களவர்களின் கோபத்தைத் தூண்டி விடும் வகையில் இந்த ஊர்திப் பவனி சென்றுள்ளது.

நான் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும், தமிழர்களுக்குஎதிராகவும் உரையாற்றவில்லை. திலீபனின் நினைவு ஊர்திப் பவனியால் தமிழ் – சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் நிலை காணப்படுகின்றது.

அனுமதி பெறாத ஒரு பவனிக்குப் பொலிஸார் எவ்வாறு அனுமதி வழங்கினார்கள் என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது. ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும். திலீபனின் நினைவேந்தல் பவனி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும்." – என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, "இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றேன்." – என்றார்.

---

## 6 பொருட்களின்...

விற்பனை நிலையங்களில் பின்வரும் பொருள்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஒரு கிலோ சோயா மீட் 45 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 580 ரூபாவாகும்.
- ஒரு கிலோ உள்ளூர் உருளைக் கிழங்கு 40 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 290 ரூபாவாகும்.
- ஒரு கிலோ நெத்தலிக் கருவாடு 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 1,100 ரூபாவாகும்.
- ஒரு கிலோ வெள்ளைப் பூண்டு 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 620 ரூபாவாகும்.
- ஒரு கிலோ பெரிய வெங்காயம் 15 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 195 ரூபாவாகும்.
- ஒரு கிலோ சிவப்பு பருப்பு 6 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 299 ரூபாவாகும்.

இந்தக் விலைக் குறைப்பு இன்று முதல் அமுலுக்கு வருகின்றது என லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

---

## துப்பாக்கிச் சூட்டில்...

இம்மாதம் முதலாம் திகதி மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இந்த நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

'மாளிகாவத்தை பிரதீப்' என அழைக்கப்படும் 38 வயதான நபரே உயிரிழந்துள்ளார். இவர் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினரும், போதைப்பொருள் கடத்தல்காரரான 'பஞ்சிகாவத்தே நெவில்' என்பவரின் சகாவும் ஆவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த நபர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 20 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'கெசல்வத்த தினுக' குழுவினரால் பழிவாங்கும் நோக்குடன் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

---

## மன்னாரில்...

1 கிலோ 12 கிராம் கொக்கைன் வகை போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம்

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ். சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே ஆலோசனையின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ரி.யூ.ஜெயவர்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே தாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த 34 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளுடன் ஆஜர்படுத்தவுள்ளனர்.

---

## திருமலை விபத்தில்...

இதன்போது அந்த வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் பழனியாண்டி (வயது 78) என்ற நபரே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மலர்ச்சாலை வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள உப்புவெளி பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தியாக தீபத்தின் 6 ஆம் நாள் நினைவேந்தல்

தியாகதீபம் திலீபனின் 6 ஆம் நாள் நினைவேந்தல் இன்றையதினம் யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் தொடர்சியான நினைவேந்தல் ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இன்று காலை மாவீரர் ஒருவரின் தாயார் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள் அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

நினைவுத் தூபிக்கு அருகில் அடையாள உண்ணாவிரதம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

இந்தப் பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வு பிரிவினர் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுக்கு வேறு வழி இல்லை

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு நடைபெற்ற கடல் சார் தேசங்களுக்குரிய மூன்றாவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கான கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றிய போது வெளிப்படுத்திய கருத்துக்கள் சில தரப்புகளினால் விமர்சிக்கப்படுகின்றன.

'இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தியே நிற்கும்' - என்று அணிசேராக் கொள்கை போன்ற ஒன்றை அவர் அங்கு பிரதிபலித்திருக்கின்றார்.

இது, இதற்கு முந்திய ராஜபக்ஷ அரசுகளின் சீன சார்புப் போக்கிலிருந்து தமது அரசு மாறாது என்ற ரணிலின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக சில விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

அவர்கள் கூறுவது உண்மையாக இருக்கலாம், அல்லது பொய்யாக இருக்கலாம். எப்படி இருந்தாலும், இப்படி இரண்டுக்கும் நடுவில் ஓர் 'இரண்டுங்கெட்டான்' நிலைப்பாட்டை எடுப்பதைத் தவிர, இலங்கையின் இன்றைய ஆட்சித் தலைமைக்கு வேறு வழியோ, மார்க்கமோ கிடையாது என்பதுதான் யதார்த்தக் களப்புற நிலைமையாகும்.


இலங்கைக்குப் பெருமளவில் கடன்களை வழங்கியுள்ள சீனாவின் பொருளாதாரப் பொறி என்ற பிடி ஒரு புறம். அயல் தேசமான இந்திய உபகண்டம் மறுபுறம். இவற்றுக்கு நடுவே இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் அல்லாடுகின்றது இலங்கை.

அதுவும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள முடியாமல் நெருக்குவாரங்களை எதிர்கொண்டு, இக்கட்டில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு இது மிக மிக முக்கியமான காலகட்டம். இந்தச் சமயத்தில் இந்தியா - சீனா இரண்டையும் எப்படியாயினும் அரவணைத்துப் போக வேண்டிய கட்டாயம் கொழும்புத் தலைமைக்கு.

'இந்த மாதம் இலங்கைக்கு மிக மிக முக்கியம். இலங்கைக்குக் கடன் வழங்கிய வெளிநாடுகளுடன் கொழும்பு கடன் மீளளிப்புத் தொடர்பான புதிய மறுசீரமைப்புத் திட்டத்திற்கு எந்த வழியிலாவது இணங்கி வர வேண்டும். இந்த இணக்கம் வரும் 27 ஆம் திகதிக்குள் - அடுத்த ஒரு வாரத்துக்குள் - எட்டப்பட வேண்டும். இந்த மறுசீரமைப்பு இணக்கத்தை கொழும்பு எட்டாவிட்டால், உர இறக்குமதி மற்றும் மருந்துப் பொருள்கள் கொள்வனவுக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்க முன்வந்த உதவி திட்டம் செயலிழந்து போகும் ஆபத்து உள்ளது. அத்தகைய சூழலில் நாடு திரும்பவும் மீள முடியாத நெருக்கடியில் வீழும்.' - இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்திருக்கின்றார்.

இத்தகைய நெருக்கடியில் நாடு சிக்கியிருக்கையில் - கடன் மற்றும் நெருக்கடி காலப் பேருதவிகளை சீனாவும் இந்தியாவும் தொடர்ந்து இலங்கைக்கு வழங்கி வருகையில் - ஒரு பக்கம் சார்ந்து, மற்றப் பக்கம் முரண்படுவது என்பது இலங்கை சிந்தித்தே பார்க்க முடியாத நிலைப்பாடாகும்.

'பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும்' காட்டும் விலாங்கு மீன் கொள்கையில் பயணிக்க வேண்டியது ரணிலின் கட்டாயம். 'அணிசேராக் கொள்கை' என்று அதற்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டு, அந்த வழியில் அவர் முன்நகர வேண்டியதுதான். அதையே அவர் நியூயோர்க்கில் பிரதிபலித்திருக்கின்றார். அவருக்கு வேறு வழி - மார்க்கம் - இல்லை.



## இலங்கையின் முன்னுரிமை புரியாத நிலையில் நாடுகள்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் முன்னுரிமைகள் பல நாடுகளுக்கு புரியவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் நலன்களுக்காக உறுதியாக நிற்கிறது.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்–

சில காலத்திற்கு முன்பு ஒருவர் என்னிடம் வந்து, நான் இந்திய ஆதரவாளனா அல்லது சீன சார்புடையவனா என்று கேட்டார்.

நான் நிச்சயமாக இந்திய சார்பு இல்லை என்று சொன்னேன். சீனச் சார்புடையவனும் அல்ல என்று கூறினேன்.

அப்படியானால் நீங்கள் நடுநிலை வகிக்கிறீர்களா என்று அவர் என்னிடம் கேட்டார். நான், இல்லை நான் நடுநிலைவாதி இல்லை. நான் இலங்கைக்கு ஆதரவானவன் என்று கூறினேன்.–என்றார்.

இலங்கையின் முன்னுரிமை பற்றித் தெரியாதவர்கள் தான் இவ்வாறாக கருத்துகளுடன் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊழியர்களின் வைப்பு நிதிக்கு பாதிப்புகள் எவையும் ஏற்படா

### பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் கீழ் ஊழியர்களின் வைப்பு நிதிகளுக்குப் பாதிப்புகள் ஏற்படாது என்பது நடைமுறை ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (19) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

இலங்கையின் மொத்த கடன் தொகை சுமார் 83 பில்லியன் டொலர்களாகும். இதில் வெளிநாட்டு கடன் தொகை சுமார் 41 பில்லியன் டொலராகும்.

அதனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 42 பில்லியன் டொலர் உள்நாட்டு கடனை மறுசீரமைப்பது குறித்தும் சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் சுமார் 26 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சுமார் ஒரு லட்சம் பேர் அதன் பயனாளிகளாக மாறியுள்ளனர்.– என்றார்.



# மாணவர் கௌரவிப்பும் சத்தியப் பிரமாணமும்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பட்டிருப்பு தேசிய பாடசாலையில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் இதன் போது மாணவத் தலைவர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது.

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ்மொழி தின போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களும் பயிற்றுவித்த ஆசிரியர்களுமே இவ்வாறு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சிரேஸ்ட மாணவ தலைவர் களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் கனிஷ்ட மாணவ தலைவர்களுக்கான சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வும் பாடசாலையின் பிரதி அதிபர் த.ஜனேந்திரராஜா தலைமையில் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# கல்முனைப் பாடசாலைக்கு போட்டோ பிரதி இயந்திரம்

(அஸ்ஹர் ஆதம்)

கல்முனை அஸ்–ஸுஹறா வித்தியாலத்துக்கு புதிய நவீன போட்டோ பிரதி இயந்திரமொன்று கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பால். அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜீதிய்யாவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.




பாடசாலைக்கான போட்டோ பிரதி இயந்திரம் வை. எம்.எம்.ஏ. மற்றும் சி. எஸ்.எம்.எம்.ஏ. ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் இதனை பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் நேற்று முன்தினம் (18) வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது கோட்டமட்ட சிறுவர் தடகளப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற தரம் 03 மாணவர்கள் மற்றும் தரம் 04 மாணவர்களும் பிரதம விருந்தினரால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.



# 'மாண்புமிகு மலையக மக்கள்' எழுச்சி நிகழ்வு மட்டக்களப்பில்

(பழுவூரான்)

'மாண்புமிகு மலையக மக்கள் 200 ஆண்டுகள்' எனும் எழுச்சிமிகு நிகழ்வு மட்டக்களப்பில் மூன்று நாள்கள் நடைபெற்றது.

கடந்த 200 வருடங்கள் நாட்டுக்கு வழங்கிய நன்மைகளுக்காக மலையக மக்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருப்போம் மலையை மக்களின் மாண்பை பாதுகாப்போம் என்னும் நோக்கில் இந்த நிகழ்வு நடதப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

'மலையக மக்களின் இருப்பை உறுதிப்படுத்துவோம் தோழமையை வலுப்படுத்துவோம்' எனும் தொனிப் பொருளில் மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் கலை வேலைப்பாடுகளுடன் கூடிய புகைப்பட கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும் இதன்போது இடம் பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியம் மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத தலைவர்கள், ஒன்றியத்தின் உறுப்பினர்கள், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றப் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்

(கல்முனை நிருபர், பழுவூரான்)

சமுர்த்தி மாணவர் சக்தி சமூக நலன்கள் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளரின் தலைமையில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதேச செயலர் தட்சணகௌரி தினேஸ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் மேனகா புவிக்குமார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 100 மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டன.



# பசுமை அமைதி விருதுகள் 2023 ஆர்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

பொருத்தமற்ற நிலப் பயன்பாடு, வளங்களின் அதீதச் சுரண்டல், கட்டுப்பாடற்றுப் பெருகும் மாசுகள், விஸ்வரூபம் எடுத்துள்ள காலநிலை மாற்றம் ஆகியனவற்றின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இயற்கை திண்டாடி வருகிறது.

இந்த நிலை நீடித்தால் விரைவிலேயே உலகம் பெரும் பிரளயத்துக்குள் தள்ளப்பட்டுவிடும் என்று சூழலியல் விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

இயற்கையின் மீதான தாக்குதலை நிறுத்தி அதனுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து, உலகத்தையும் காப்பாற்ற முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டு, பொது மக்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் மாணவர்களுக்கும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் ஒருவருக்கும் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

மாணவர்களுக்கான பசுமை அமைதி விருதுகள் - 2023 இல் மாணவர்களிடையே பசுமை அமைதி விருதுக்கு உரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணைய வழியில் நடத்தப்படும்.

இந்தப் பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும், இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும்.

இலவசமாக நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் www.tamilnationalgreen.org இணையத் தளத்தின் ஊடாக 15.10.2023 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பரீட்சை இணைய வழியூடாக 28.10.2023 சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8.30 மணிவரை நடைபெறும்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும் இந்தப் பரீட்சை 100 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். கடந்த கால வினாத்தாள்களை இணையத் தளத்தில் பார்வையிட முடியும்.

பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

இவர்களிலிருந்து பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதழோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் பசுமை அமைதி விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் ஒரு பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

இந்தப் பசுமை அமைதி விருதுகள் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும்.

சிறப்புப் பரிசுகளையும் விருதுகளையும் தீர்மானிப்பதற்குப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு தொகுதி மாணவர்கள் தேவை ஏற்படின் இரண்டாவது சுற்றுப் பரீட்சைக்கும் தோற்ற நேரிடலாம்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பரிசுகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் நடத்தப்படும் பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழாவில் வைத்து வழங்கப்படும்.

சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருது - 2023, சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல்நேயச் செயற்பாடுகளில் பல ஆண்டுகளாகத் தீவிரமாக உழைத்து வரும் தனிநபர் ஒருவருக்கு வழங்கப்படும்.

பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பரிந்துரையில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதும் ஒரு லட்சம் ரூபா பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

இந்தப் பசுமை அமைதி விருது தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும்.

சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்புபவர்கள் அவர் பற்றிய விவரங்களைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், இல. 109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது greenta mils5@ gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

பரிந்துரைகளை அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதி 31.10.2023 ஆகும்.

# மாணவத் தலைவிகளுக்கு சம்மாந்துறையில் பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம் )



சம்மாந்துறை அல் மர்ஜான் பெண்கள் உயர் பாடசாலையின் மாணவத் தலைவிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பாசறை பாடசாலை ஒழுக்கற்று குழுவின் ஏற்பாட்டில் பொறுப்பாசிரியர் எம்.எம். நௌபல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக அதிபர் எச்.எம். அன்வர் அலி யும், விசேட விருந்தினராக உதவி அதிபர் அஷ்ஷைக் ஏ.ஆர்.எம். உவைஸ் நளீமி, பிரதி அதிபர் யூ.எல்.ஏ.றஷீட் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் வளவாளராக தலைமைத்துவ பயிற்றுவிப்பாளர் மேஜர் கே.எம்.தமீம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வைப் பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவின் இணைப்பாளர் ஆசிரியர் ஸீ.எம்.தில்சாத் வழிநடத்தினார். ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களான ஏ.ஸி.எம். முஸ்தபா, எச். எம்..ஜௌசன் ஸகிய்யா, எம்.எம்.உம்மு பௌசியா , யூ.கே.சதகதுல்லாஹ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# நோயாளர் பாதுகாப்பு தினத்தில் கல்முனையில் விழிப்புணர்வு

(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)

செப்டம்பர் 17 உலக நோயாளர் பாதுகாப்பு தினமாகும். உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கு அமைவாக கல்முனை பிராந்திய பொது சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மியால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் (18) பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சந்திப்பு...



(அஸ்ஹர் ஆதம் )

இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதரகத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானிக்கும் பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி சுபைர் முஹம்மத் ஹம்தல்லாஹ் சைத் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை (18) சவூதி அரேபிய தூதரகத்தில் இடம் பெற்றது.

# பாற்குடபவனி...





(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பாற்குடபவனி நேற்று முன்தினம் (18) திங்கட்கிழமை காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி ஆலயத்தை நோக்கி வந்தடைந்தது.

# இந்தியப் பேராசிரியருடன் சந்திப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

இந்தியப் பேராசிரியர் அப்துல் காதரை நேற்று முன் தினம் (18) அவர் தங்கியிருந்த வெள்ளவத்தை குளோபல் டவர் விடுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியாபோரத்தின் தலைவர் என்.எம். அமீன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் புர்ஹான் பீபி இப்திக்கார் ஆகியோர் சந்தித்து உரையாடினர். இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் திருச்சி சாஹுல் ஹமீத் கலந்து கொண்டார்.

பேரசிரியர் 40 நூல்கள் எழுதியுள்ளார். தமிழ் நாட்டில் அவருக்கு முனைவர் பட்டமும் வழங்கப்பட்டது. தமிழ் பற்றிய மாநாடுகள் விழாக்க ளில் உரையாற்றுபவர். தமிழ்மொழி சம்பந்தமான சங்கத்தின் தலைவர். தமிழ் மொழியிலேயே கலாநிதி பட்டம் பெற்று கம்பராமயணத்தில் முதுநிலைப்பட்டம் பெற்றவர். வானம்பாடி மன்றம் மற்றும் தமிழ்த் துறை தலைவராக பதவிவகித்துள்ளார். அவர் அவரது ஊரான இந்தியா, வானம் பாடிக்குப் பயணமானார்.





# ஊடகப் பெருவழியில் செயற்கை நுண்ணறிவு!

இன்றைய உலகில் இயற்கைக்கு மாறாக அனைத்தும் செயற்கையாக நாளுக்கு நாள் உருவாக்கி உருவாக்கப்பட்டு கொண்டே இருக்கின்றது. அந்த வகையில் ஊடகத்துறையிலும் கூட பல வளர்ச்சிகள், முன்னேற்றங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஊடகத்துறையில் அனைவரையும் அதிர்ச்சி அடைய செய்த ஓர் விடயமாக செயற்கை நுண்ணறிவு (AI -Artificial Intelligence) காணப்படுகின்றது.

ஊடக வழியில் குறிப்பாக செய்திகள், பொழுதுபோக்குகள் , மகிழ்வூட்டுதல் போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் இந்த நுண்ணறிவின் செயற்பாடு மிகத் துரிதமாக நுழைந்து விட்டது . காலத்தின் தேவை கருதி இந்தச் செயற்கை நுண்ணறிவும் பல புதிய முன்னேற்றங்களையும், புதிய விடயங்களையும் ஊடகப் பெருவழிக்குள் உள்வாங்குவதற்கு மிகப் பெரும் சாதனமாக இது அமைகிறது .

இரு நபர்கள் அதிகமாக எதை தேடுகின்றார்கள், பார்க்கின்றார்கள் எதைப்பற்றியும்அதிகம் உரையாடுகிறார்கள் என்பதை எமக்குத் தெரியாமலே எமது கைத் தொலைபேசிகள் தகவல்களைப் பெற்று அது சார்ந்த தகவல்களை எமக்கு அதிகமாக காண்பிக்கின்றன. அதுமட்டுமன்றித் தரவுகளைத் தகவல்களாக மாற்றிச் சேகரிக்கும் செயல்முறையிலும் செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் அதிகமாக உள்நுழைந்துவிட்டன .அதாவது நிரல் மொழிகள் (Algorithms) வழியாக தகவல்களைச் சேகரிக்கும் செயல்முறையாக இன்று தொடர்பாடல் செயல்முறை மாறிவிட்டது .

Facebook, Twitter, You Tube போன்றவற்றின் முறைப்பாட்டைச் செய்யும் போது கூட அதனை பரிசீலனை செய்யும் செயற்பாடடை மேற்கொள்வதற்கு இந்த செயற்கை நுண்ணறிவு உதவி செய்கின்றது . காட்சி வழியான வீடியோப் பதிவுகளுக்கான உபதலைப்புகளைத் தருவதற்கும், திரைப்படம், சின்னத்திரை போன்றவற்றுக்கான உபதலைப்புகளை இடுவதற்கும் செயற்கை நுண்ணறிவு சாத்தியமாகிவிட்டது.

அதேபோல மனிதர்களைப் போன்று அன்றாடம் தொலைக் காட்சிகளில் செய்தி வாசிப்பதற்கும் செயற்கை நுண்ணறிவுகள் வந்துவிட்டன. அது மாத்திரமன்றி எமக்குத் தேவையான தகவல்கள் எங்கிருந்தாலும் அதனைப் பெற்றுத் தரக்கூடிய வகையில் Chatgbt போன்ற செயல்களும் உருவாக்கப்பட்டுவிட்டன.

ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் தேவையான தகவல்களை பரிந்துரை செய்யும் வண்ணம் செயற்கை நுண்ணறிவின் பால் இயங்கும் டீழழஅடிநசப போன்ற தரவு கட்டமைப்புகள் இன்று பிரபலயம் பெற்றுவிட்டன.

இவ்வாறான நிலையில் பல சாதகமான செயற்பாடுகளை ஊடகப் பெருவழியில் செயற்கை நுண்ணறிவு ஆற்றினாலும் அதற்கு எதிரான பாதகமான மறுபக்கம் காணப்படுவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்கள் செய்யும் பல செயற்பாடுகளைச் செயற்கை நுண்ணறிவு ஆற்றுவதால் பல மனிதர்கள் தமது தொழில் நிலைமையைத் தக்க வைப்பது கேள்விக் குறியான ஒரு விடயமாக மாறிவிட்டது. செயற்கை நுண்ணறிவின் காரணமாகத் திட்டமிட்ட வகையில் போலிச் செய்திகள் பரப்பப்படுவதன் காரணமாக பல பாதகமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய துப்பாக்கிய நிலை இந்தச் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது .

ஒரு தனிப்பட்ட நபரின் சிந்தனைகளை சுருக்கி ஓர் ஆபத்தான விடயமாக இந்த செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் மாறிவிட்டன. இவ்வாறு செயற்கை நுண்ணறிவு இணைய வழிப் பாதுகாப்பிலும், கண்காணிப்பிலும் அதிகம் பயன்படுத்தப்பட்டாலும் இணைய வழியால் தகவல் திருடப்படுவதாலும், போலியான தகவல் பரப்பப்படுவதாலும் தினம் பல குற்ற செயல்கள் எம் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

தொழில்நுட்பமும்இணையமும் வளர்ச்சிபெற்ற தற்கால சூழலில் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக மாறி வரும் தற்கால சூழலில் இவ்வாறான செயற்கை நுண்ணறிவின் நாம் தவிர்த்துக்கொள்ள முடியாது.

ஆனால் இவ்வாறான செயற்கை நுண்ணறிவு தொடர்பான சாதக, பாதகங்களை அறிந்து முழுமையான ஒரு விழிப்புணர்வுள்ள அறிவுடன் அவற்றை அணுகுவோமாக இருந்தால் செயற்கை நுண்ணறிவினால் ஏற்படும் பல பிரச்சினைகளில் இருந்து தற்காத்துக் கொள்ளலாம்.

**கனிஷ்ரா ஜெயக்காந்தன்,**
இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.









# மீளத் துடிக்கும் கிராமங்களுக்கு விடிவு கிட்டுமா?

■ த.சுபேசன்

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட கோவிற்குடியிருப்பு கடல் வட்டா ரத்தின் மகிழங்கேணி மற்றும் உதய சூரியன் கிராம மக்கள் அரச திணைக் களங்களின் அலட்சியப் போக்கால் 2016 ஆம் ஆண்டில் இருந்து பல்வே றுபட்ட இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு தென் மராட்சிப் பிரதேச செயலகத்தால் மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராமங்களில் 60 இற்கும் மேற்பட்ட காணியற்ற குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் மக்கள் குடியிருக்க முடியாத கடலோடு இணைந்த மாரி காலத்தில் நீர் தேங்கக் கூடிய தாழ்வான பகுதியாகும். இருப் பினும் வீட்டுத் திட்டக் கனவை மக்கள் மனதில் விதைத்து பலரது விமர்சனங்க ளையும் கடந்து காணி வழங்கப்பட்டி ருந்தது.

அவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் குடியிருக்கும் மக்கள் சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட திணைக்களங்களின் அலட்சியத்தால் பல்வேறு இன்னல்க ளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

குடியிருப்பில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் நகரசபையின் கழிவு கள் கொட்டப்படும் இடம், கொல்களம் மற்றும் மயானம் ஆகியன காணப்படு கின்றன. இந்த நிலையில் பல்வேறுபட்ட சுகாதார பிரச்சனைகளுக்கு தினமும் முகம்கொடுத்து வருகின்றனர்.

நகரசபையினர் உரிய கழிவு முகா மைத்துவத்தை மேற்கொள்ளாமலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றியும் கழிவுகளை மக்களுடைய குடியிருப்புக்கு மிக அருகாமையில் கொட்டுகின்றனர்.

இதனால் பிறப்பிலேயே குறைபாடு டைய குழந்தைகள் பிறத்தல்,ஆயுள் காலம் குறைவடைதல், சுவாசப் பிரச் சினை, தொற்று நோய், புற்றுநோய் மற்றும் நுளம்புப் பெருக்கம் என்று சொல்ல முடியாத துயரங்களுக்கு அந்த மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

நகரசபைக் கழிவுகளால் அந்த மக்கள் தூய காற்றை சுவாசிக்க முடியாத வர்களாக, நல்ல நீரை உட்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.







நகர சபையின் குப்பை மேட்டில் குப்பைகள் நிறையும் வேளையில் சில அதிகாரிகளே வேண்டுமென்று அதற்கு தீ மூட்டி விடுவதால் பொலித்தீன், பிளாஸ் டிக் என அனைத்துக் கழிவுகளுமே உருகி அந்த கிராமம் உட்பட அயல் கிராமங்களும் புகை மண்டலத்துக்குள் கிழமைக் கணக்கில் மூழ்கும் நிலை காணப்படுகிறது.

நகர சபையின் கழிவகற்றல் இடத்தில் திரவ கழிவுத் தொட்டிகள் திறந்த நிலை யிலும், கொல்கள கழிவு நீர் நிலத்தில் தேங்கி கடலில் கலக்கும் நிலையிலும், பொலித்தீன் கழிவுகள் கச்சாய் கடலுக் குள்ளும், குடியிருப்புக்களுக்குள்ளும் பரவும் நிலையிலும், மயானத்தில் இருந்து சடலம் எரியூட்டும் புகை கிரா மத்தை வந்தடையும் நிலையிலும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை நகரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கவ னத்துக்குக் கொண்டு சென்ற போதிலும் 'நகர சபையின் கழிவு மையம் முதலில் இருப்பது தெரிந்தும் மேற்படி இடத்தில் வாழ்விடத்தைத் தேர்ந்தெடுத்தது அவர்க ளுடைய தவறு' என பதிலளிக்கும் நிலையே காணப்படுகின்றது. ஆனால், அந்த மக்களோ நகர சபையின் கழிவு மையத்தை வேறிடத்துக்கு நகர்த்தித் தம்மை நோய் நொடியில் இருந்து காப்பாற்றுமாறு கோருகின்றனர்.

மக்களுக்குச் சேவையாற்றும் பொறுப்பு வாய்ந்த திணைக்களம் என்ற வகையில் நகரசபை தமது நலன் பற்றி சிந்திப்பதே பொருத்தமானது என்று அந்த மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராமங்களில் பெரும் எண்ணிக்கை யானவர்கள் நகரசபையின் சுகாதார தொழிலாளர்களாக காணப்படும் நிலையில் , அவர்களே நகரின் ஏனைய வட்டாரங்களை தூய்மைப்படுத்தி அனைத்து கழிவுகளையுமே தமது குடியிருப்புக்கு அருகாமையில் கொட்ட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளனர்.



# சட்டத்தைக் கையில் எடுக்கும் காடையரை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் அறிக்கை

(ஹஸ்பர்)

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை கையிலெடுக்க காடையர்களுக்கு அனுமதி வழங்க முடியாது. சட்டத்தை கையில் எடுக்கும் காடையர்களைக் கைது செய்ய வேண்டும்.

இவ்வாறு கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (19) வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

கடந்த காலங்களில் சிறுபான்மை சமூகத்தின் மீது அரங்கேற்றப்பட்ட அநியாயங்கள் போன்றே தியாக திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தின் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் இனவெறுப்பு தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் அநியாயமாக உயிர்களையும் உடமைகளையும் இழந்த அனுபவங்கள் இருந்தும் மீண்டும் அதே இன வெறுப்பு நிகழ்ச்சி நிரலை அரசியல் சுய நலத்துக்காக மீண்டும் கையில் எடுக்கின்றார்கள்.



தியாக திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தை நிறுத்துவதாயின் நீதிமன்ற கட்டளையைப் பெற்றிருக்க வேண்டுமே தவிர காடையர்களைக் கொண்டு வழி மறித்துத் தாக்குதலை நடத்த அனுமதிக்க முடியாது.

இதே போன்றுதான் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தின் மீதும் அவர்களின் உடமைகள் மீதும் பள்ளிகள் மீதும் எந்த ஒரு அடிப்படையும் இன்றி அரசியல் இலாபங்களுக்காக பெரும்பான்மை காடையர்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தினார்கள்.

இவ்வாறான தாக்குதல்கள் குறித்து பல்வேறு முறைபாடுகள் செய்யப்பட்டிருந்தும் குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இனங்களிடையே ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் நிலைநாட்டுகிறோம் என்று ஐ.நாவரை கூச்சலிடும் ஆட்சியாளர்கள் சட்டத்தையும் நீதியையும் குறிப்பிட்ட ஒரு சமூகத்துக்கு மாத்திரம் விலக்களிக்கப்பது மனித உரிமை மீறல்களாகும்.

எனவே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது தாக்குதல் நடாத்திய காடையர்களின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் .– என்றுள்ளது.



# நுவரெலியா ரீப்பப்ளிகன் மாணவர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நுவரெலியா ரீப்பப்ளிகன் சர்வதேச பாடசாலையில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சுபசிங்க தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பாடசாலையின் பணிப்பாளர் எம்.மரியசூசை பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இந்த நிகழ்வில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# மஸ்கெலியா மாணவர்களுக்குக் காலணிகள்

**(மஸ்கெலியா நிருபர் )**

ஹட்டன் கல்வி வலய கோட்டம் மூன்றில் உள்ள மஸ்கெலியா சமனெலிய சிங்கள மஹா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 320 மாணவர்களுக்கு வித்தியாலய அதிபர் அருனசாந்தகுமார தலைமையில் காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் மத்திய மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மேனகஹேரத், எஸ்.ஓ.எஸ். நிறுவனத் தலைவர் முரளீதரன்குமார், ஹட்டன் வலய பணிப்பாளர் நிஹால் அலக கோன் மற்றும் முன்னாள் அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## கரையோர பாதுகாப்பு வாரம் களுவாஞ்சிக்குடியில் ஆரம்பம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

சர்வதேச கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் வாரத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு நேற்று (19) பெரியகல்லாறு மற்றும் களுவாஞ்சிகுடி கிராம சேவகர் பிரிவுகளில் ஆரம்பமாகியது.

பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டமானது கிழக்கு மாகாண ஆளுனரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு கரையோரங்களை தூய்மையாக பேணுதல் எனும் திட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பொது மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கரையோரங்களைச் சுத்தம் செய்தனர்.

இந்த நிகழ்வைப் பிரதேச செயலக கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான தயோ. நிசந்தராசன் மற்றும் ஆ. ஜெகரூபன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.










## அனர்த்த நிவாரண செயலமர்வு

**(அ.அஸ்வர்)**

உலக உதவித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட அனர்த்த நிவாரண உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு அண்மையில் அம்பாறையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் அம்பாறை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் பிரதேச செயலக மட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகப் பேணப்படும் அனர்த்த பாதுகாப்பு திட்டத்தின் இணையத் தகவல் அமைப்பில் உள்ளடக்கப்படும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான இந்த பயிற்சி பட்டறை அம்பாறை மாவட்ட நிவாரண சேவை அதிகாரி ஏ.ஜி. ஹசிக மாதவ மற்றும் ஏ. முஹம்மது பெரோஸ் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது.



# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள்

(எம்.எப்.நவாஸ்)

நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.பீ.எம். சில்மி தலைமையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சுகாதார மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் வளவாளர்களாக பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. எம். ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் டாக்டர் எம். எச். கே. சரூக், சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம் பைரூஸ் ஆகியொர் கலந்து கொண்டனர்.

# வவுனியா பல்கலைக் கழகத்தில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி



வவுனியா பல்கலைக் கழகத்தில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி நிகழ்வு இன்று (20) இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம் பெயர் தேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் தியாக தீபன் திலீபன் உண்ணாவிரதம் இருந்த 6 ஆம் நாளான இன்று (20) வவுனியா பல்கலைக் கழகத்தில் அவருடைய திருவருப்பபடம் பொறித்த பதாகை காட்சிப் படுத்தப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# நல்லூரில் அன்ட்ரியா...



தென்னிந்திய பிரபல நடிகை அன்ட்ரியா இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இவர் இன்று (20) நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்கு வருகைதந்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# இந்தியப் பயணத்தைத் தவிருங்கள்! நாட்டு மக்களுக்கு கனடா அறிவிப்பு



அத்தியாவசிய தேவையின்றி இந்திய பயணத்தை கனேடியர்கள் தவிர்க்க வேண்டும் என கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.

தகுந்த பாதுகாப்புடன் இந்தியாவிற்கு, குறிப்பாக ஜம்மு – கஷ்மீர் போன்ற பதற்றம் மிக்க பகுதிகளுக்கு எச்சரிக்கையுடன் பயணம் மேற்கொள்ள வேண்டும்என கனடா அறிவுறுத்தியுள்ளது.

காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசாங்கம் இருக்கலாம் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தியா – கனடா இடையிலான உறவு விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கனடா அரசாங்கம் தனது மக்களுக்கான பயண எச்சரிக்கை அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜர் கொலையில் இந்தியாவுக்கு தொடர்புள்ளது என கனடா குற்றம்சாட்டியது.

கனடாவில் கொல்லப்பட்ட சீக்கியர் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலையில் இந்திய அரசாங்கத்தின் பங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது என ட்ரூடோ வெளிப்படையாக குற்றம்சாட்டியிருந்தார்.

இதைத்தொடர்ந்து, மோதல் தீவிரமடைந்த நிலையில் இந்திய தூதரக அதிகாரி ஒருவரை, நாட்டை விட்டு வெளியேறும்படி கனடா அதிரடியாக உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதற்கு பதிலடியாக கனேடிய தூதரக அதிகாரி ஒருவரை இந்தியா நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

கனடாவின் முடிவால் அமெரிக்கா அதிருப்தி இதற்கிடையே, காலிஸ்தான் தலைவர் கொலையில் இந்தியா மீது கனடா அரசு குற்றம் சாட்டியதற்கு அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ஆயிரக்கணக்கான மக்கள் அச்சத்தில்!





நியூசிலாந்தின் தெற்கு தீவுக்கு அருகில் 6.2 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம் இன்று காலை அந்நாட்டு நேரப்படி காலை 9.20 மணியளவில் பதிவாகியுள்ளது.

நியூசிலாந்தின் முக்கிய நகரான கிறிஸ்ட்சர்ச்சில் இருந்து மேற்கே, 124 கிலோ மீட்டர் தொலைவில் தென்மத்திய தீவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தை சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணர்ந்துள்ளனர்.

நியூசிலாந்தின் பல பகுதிகளில் இதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இங்கிலாந்தில் அரியவகை புறாக்கள்!



இங்கிலாந்தில் காணப்பட்ட அரியவகை புறாக்களினுடைய புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இங்கிலாந்தின் – மென்செஸ்டர் நகரில் இந்த புறாக்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புறாக்களை பார்த்த அப்பகுதி மக்கள் இதனை புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இந்த புறாக்களின் நிறம் இயற்கையானதா? அல்லது யாரேனும் இந்த புறாக்கள் மீது சாயம் பூசியுள்ளனரா? என கேள்வி எழுப்பியும் வருகின்றனர்.

# மகளிர் இட ஒதுக்கீடு சட்டமூலத்தை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது!

## மக்களவையில் சோனியா காந்தி தெரிவிப்பு

மகளிர் இட ஒதுக்கீடு சட்டமூலத்தை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி மக்களவையில் தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தின் மக்களவையில் முதல் சட்டமூலமாக, மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் இந்த சட்டமூலத்தை தாக்கல் செய்தார். அப்போது பேசிய அவர், மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் இந்த சட்டமூலத்தை அனைத்து உறுப்பினர்களும் ஆதரிக்க வேண்டும். மக்களவையில் 82 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். சட்டமூலம் அமலுக்கு வரும் போது, இந்த எண்ணிக்கை 181 ஆக அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக மக்களவையில் நேற்று பேசிய பிரதமர் மோடி, புதிய நாடாளுமன்றத்தில் முதல் சட்டமூலமாக 'நாரி சக்தி வந்தன்' சட்ட மூலம் தாக்கல் செய்யப்படுகிறது. இந்த சட்டமூலம் ஊடாக மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு உறுதி செய்யப்படும்.

மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் 1996 இல் முதல்முறையாக அறிமுகம் செய்யப் பட்டது. வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பலமுறை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், நிறைவேற்ற முடியவில்லை. இந்திய பெண்களுக்கு அதிகாரம் அளிக்க, கடவுள் என்னை தேர்ந்தெடுத்திருக்கிறார் என்றே கருதுகிறேன். இந்திய தாய் மார்கள், சகோதரிகளின் கையில் அதிகா ரத்தை அளிக்க வேண்டியது நமது கடமை.

இந்த சட்டமூலம் ஊடாக இந்திய ஜனநாயகம் மேலும் வலுவடையும். மகளிர் இடஒதுக்கீடு மசோதாஅடுத்த



சில நாட்களில் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும். அங்கு எங்களுக்கு பெரும்பான்மை பலம் இல்லை. நாட்டின் நலன் கருதி, சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு அளிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

இந்த சட்டமூலம் மீது மக்களவையில் இன்று விவாதம் தொடங்கியது. விவாதத் தைத் தொடக்கிவைத்துப் பேசிய மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், இந்த சட்டமூலம் பெண்களின் கண்ணியத்தையும், அவர்களுக்கு சம வாய்ப்பு கிடைப்பதையும் உறுதி செய்யும். இந்த சட்டமூலத்துக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதையடுத்துப் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் 'நாரி சக்தி வந்தன்' சட்ட மூலத்தை காங்கிரஸ் ஆதரிக்கிறது.

எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் இது ஒரு உணர்வுப்பூர்வமான தருணம். பெண்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் இட ஒதுக்கீடு கொண்டு வர முதல்முறையாக முயன்றவர் எனது கணவர் ராஜீவ் காந்தி. ஆனால், அந்த சட்டமூலம் மாநிலங்கள வையில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

அதன் பிறகு பி.வி. நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் அந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், இன்று நாட்டில் 15 லட்சம் தேர்ந்தெடுக் கப்பட்ட பெண் தலைவர்கள் உருவாகி இருக்கிறார்கள். இதன் மூலம் ராஜீவ் காந்தியின் கனவு ஓரளவு நனவானது. சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத் திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் இந்த சட்டம் நிறைவேறினால்தான் அவரது கனவு முழுமையாக நனவாகும்.

இந்த சட்டமூலத்தை நிறைவேறு வதில் நாங்கள் மகிழ்ச்சி அடை கிறோம் என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தான் கையேந்தி நிற்கும் வேளை இந்தியாவோ நிலவை அடைந்துவிட்டது!

## பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் விமர்சனம்



பாகிஸ்தான் உலக நாடுகளிடம் பணத்துக்காக கையேந்தி நிற்கும் வேளையில் இந்தியாவோ நிலவை வெற்றிகரமாக அடைந்துவிட்டது என பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் விமர்சனம் செய்துள்ளார்.

அண்மையில் லாகூரில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் லண்டனில் இருந்து காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பாகிஸ்தானின் பணவீக்கம் இரட்டை இலக்கமாக அதிக ரித்துள்ளது.

பணத்துக்காக பாகிஸ்தான் உலக நாடுகளிடம் கையேந்தி நிற்கும்போது, இந்தியாவோ நிலவை அடைந்துவிட்டது.

அத்துடன், ஜி 20 மாநாட்டையும் இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இந்தியாவின் சாதனைகளை ஏன் பாகிஸ்தானால் அடைய முடிய வில்லை? என்று நவாஸ் ஷெரீப் கேள்வி எழுப்பியுள்ளார்.

# காவிரி விவகாரம்: அவசர மனு தாக்கல்

காவிரி மேலாண்மை ஆணை யத்தின் உத்தரவிற்கு எதிராக கர்நாடக அரசு உச்சநீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு எதிர்வரும் 15 நாட்களுக்குள் ஐயாயிரம் கன அடி நீரை கர்நாடக அரசு திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையகம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில். கர்நாடக அரசு அவசர மனு ஒன்றை இன்று தாக்கல் செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து, காவிரி விவகாரம் தொடர்பில் தமிழ்நாடு அரசின் மனு மீதான விசாரணை நாளை உச்சநீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான நீளம் பாய்தல்: பாலமுனை அல்-ஹிக்மா மாணவன் முதலிடம்







(றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான நீளம் பாய்தல் போட்டி யில் பாலமுனை அல்–ஹிக்மா வித்தி யாலய மாணவன் எம்.எச்.எம்.நிப் றான் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

கிழக்கு மாகாண மட்ட மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கந்தளாய் லீலாரத்ன விளையாட்டரங் கில் நடைபெற்று வருகின்றன.

இதில், முதலாம் நாளான செவ் வாய்க்கிழமை (19) நடைபெற்ற 18 வய துக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் நிப்றான் பங்கு பற்றினார்.

இவர் 6.58 மீற்றர் தூரம் பாய்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், மாகாண மட்டப் போட்டி களில் சிறப்பு மெய்வல்லுநர் விருதை யும் நிப்றான் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# தேசிய மட்டக் கிரிக்கெட் தொடரில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாதிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக் கிடையிலான கிரிக்கெட் தொடரில் காலி மஹிந்த கல்லூரியை வீழ்த்தி யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பிரிவு 2 இற்குள் நுழைந்துள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கிரிக்கெட் போட்டிகள் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடந்து வருகின்றது. இதன், பிரிவு-3 கிரிக் கெட் தொடரில் 15 வயதுக்குட்பட்ட 316 அணிகள் பங்கேற்றுள்ளன.

இதில் பொலன்னறுவை றோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காலிறுதி ஒன்றில், காலி மகிந்த கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போட்டியிட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காலி மஹிந்த கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப் பாணம் இந்து கல்லூரி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 71 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இந்த வெற்றியையடுத்து அந்த அணி அரையிறுதிக்குள் நுழைந்துள் ளது.

அத்துடன், யாழ். இந்துக் கல்லூரி பிரிவு 2 ற்கும் முன்னேறியுள்ளது. 13 வருடங்களாக பிரிவு 3 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.